# மார்ச் – 04 – திங்கள்

## நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்? மாற்.10:17

### முதல் வாசகம் : சீராக்கின் ஞானம் 17 : 20 - 29

மனிதர்களுடைய அநீதியான செயல்கள் அவருக்கு மறைவாய் இருப்பதில்லை. அவர்களின் பாவங்கள் அனைத்தையும் ஆண்டவர் அறிவார்.(ஆண்டவர் நல்லவர் அவர் தம் படைப்புகளை அறிவார். அவற்றை அவர் விட்டுவிடவில்லை, கைவிடவுமில்லை் மாறாகப் பாதுகாத்தார்.)மனிதர் செய்யும் தருமங்கள் அவருக்குக் கணையாழிபோல் திகழ்கின்றன. அவர்கள் புரியும் அன்புச் செயல்கள் அவருக்குக் கண்மணிபோல் விளங்குகின்றன.பின்னர் அவர் எழுந்து அவர்களுக்குக் கைம்மாறு செய்வார் அவர்களுக்குச் சேரவேண்டிய வெகுமதியை அவர்களின் தலைமேல் பொழிவார். இருப்பினும் மனம் வருந்துவோரைத் தம்பால் ஈர்த்துக்கொள்கிறார் நம்பிக்கை இழந்தோரை ஊக்குவிக்கிறார்.ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள் பாவங்களை விட்டு விலகுங்கள் அவர் திருமுன் வேண்டுங்கள் குற்றங்களைக் குறைத்துக் கொள்ளுங்கள்.உன்னத இறைவனிடம் திரும்பி வாருங்கள் அநீதியை விட்டு விலகிச் செல்லுங்கள் அவர் அருவருப்பதை அடியோடு வெறுத்திடுங்கள்.வாழ்வோர் உன்னத இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றனர் ஆனால் கீழுலகில் அவரது புகழை யாரே பாடுவர்?உயிர் வாழ்ந்திராதவர் போன்றே இறந்தவர்களும் அவருக்கு நன்றி செலுத்துவதில்லை உடல் நலத்துடன் உயிர் வாழ்வோரோ அவரைப் போற்றுகின்றனர்.ஆண்டவரின் இரக்கம் எத்துணைப் பெரிது! அவரிடம் மனந்திரும்புவோருக்கு அவர் அளிக்கும் மன்னிப்பு எத்துணை மேலானது!

**பதில்பாடல்:** நீதிமான்களே ஆண்டவரை முன்னிட்டு அகமகிழுங்கள்

### நற்செய்தி : மாற்கு 10 : 17 - 27

அக்காலத்தில், இயேசு புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தபோது வழியில் ஒருவர் அவரிடம் ஓடிவந்து முழந்தாள் படியிட்டு, ”நல்ல போதகரே, நிலை வாழ்வை உரிமையாக்கிக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?” என்று அவரைக் கேட்டார். அதற்கு இயேசு அவரிடம், ”நான் நல்லவன் என ஏன் சொல்கிறீர்? கடவுள் ஒருவரைத் தவிர நல்லவர் எவருமில்லையே. உமக்குக் கட்டளைகள் தெரியும் அல்லவா? ”கொலைசெய்யாதே விபசாரம் செய்யாதே களவு செய்யாதே பொய்ச்சான்று சொல்லாதே வஞ்சித்துப் பறிக்காதே உன் தாய் தந்தையை மதித்து நட”” என்றார்.அவர் இயேசுவிடம், ”போதகரே, இவை அனைத்தையும் நான் என் இளமையிலிருந்தே கடைப்பிடித்து வந்துள்ளேன்” என்று கூறினார். அப்போது இயேசு அன்பொழுக அவரைக் கூர்ந்து நோக்கி, ”உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. நீர் போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்” என்று அவரிடம் கூறினார். இயேசு சொன்னதைக் கேட்டதும் அவர் முகம்வாடி வருத்தத்தோடு சென்று விட்டார். ஏனெனில் அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது. இயேசு சுற்றிலும் திரும்பிப் பார்த்துத் தம் சீடரிடம், ”செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும் கடினம்” என்றார். சீடர்கள் அவர் சொன்னதைக் கேட்டுத் திகைப்புக்கு உள்ளானார்கள். மீண்டும் இயேசு அவர்களைப் பார்த்து, ”பிள்ளைகளே, செல்வர்கள் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும் கடினம். அவர்கள் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது” என்றார். சீடர்கள் மிகவும் வியப்பில் ஆழ்ந்தவர்களாய், ”பின் யார்தாம் மீட்புப்பெற முடியும்?” என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள். இயேசு அவர்களைக் கூர்ந்து நோக்கி, ”மனிதரால் இது இயலாது. ஆனால் கடவுளுக்கு அப்படியல்ல, கடவுளால் எல்லாம் இயலும்” என்றார்.

**தியானம்:** இறப்பிற்கு பின்னால் எனக்கு என்ன நிகழும்? என்ற கேள்வி பலருடைய வாழ்வை புரட்டிப் போட்டிருக்கின்றது. இறப்பு என்பது முடிவல்ல மாறாக மறுவுலக வாழ்வுக்கான ஆயத்தம் என்பது தான் கத்தோலிக்கத் திருச்சபையின் நிலைப்பாடும் நம்பிக்கை அறிக்கையும். “நாம் யாவரும் சாகமாட்டோம் ஆனால், அனைவரும் மாற்றுருப் பெறுவோம். ஏனெனில் அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும். சாவுக்குரிய உடல் சாகாமையை அணிந்தாக வேண்டும்” (1கொரி.15:51,53) என்ற பவுலடியாரின் வார்த்தைகள் இதனை உறுதிப்படுத்துகின்றது. “தங்களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்ட ஆன்மாக்களை திருப்பிக் கொடுக்க வேண்டியபொழுது அவர்கள் எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டிருந்தார்களோ அந்த மண்ணுக்கே திரும்பிப் போகிறார்கள்” (சா.ஞா.15:8). இந்த உடல் அழிந்தாலும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆன்மா அதனுடைய உரிமையாளராகிய கடவுளிடம் திரும்பிச் செல்லுகின்றது. அப்படி செல்லும்போது அது இந்த மண்ணான உடலில், உலகத்தில் வாழும்போது கட்டிக்கொண்ட பாவங்களுக்கு அல்லது புண்ணியங்களுக்கு ஏற்ப கடவுளால் தீர்ப்புக்குள்ளாகி பிசாசினுடைய ஆளுகையில் இருக்கும் நரகத்திற்கோ அல்லது கடவுளின் பிரசன்னத்தில் மகிழ்ந்திருக்கவோ தீர்ப்பு பெறும். ஆகவே எப்போதும் ஒரு மனிதன் தன் ஆத்துமாவைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும். “மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்?” (மத்.16:26). இவ்வுலகில் வாழும் மனிதன் தன்னுடைய சக்தியால், புத்தியால், திறமைகளால், பொருளாதாரத்தால் இந்த உலகத்தையே ஜெயித்து வலம் வந்தாலும் அவனுக்குள் இருக்கும் ஆத்துமாவைக் குறித்து கவனமில்லாமல் தன்னுடைய இஸ்டப்படி வாழ்ந்தால் இறுதியில் அவன் வாழ்ந்த வாழ்வுக்குப் பொருளென்ன? “எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது” (லூக்.12:15). நாம் இந்த உலகிலே வாழ்வதற்காக கொடுக்கப்பட்ட பொருள்களை, செல்வத்தை பிடித்துக் கொண்டு ஒப்பற்ற செல்வமாகிய இயேசுவை நாம் இழந்துவிட்டால் அதனால் பயன் என்ன? “நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்” (மத்.19:21) என்பதுதான் இயேசுவின் அன்புக் கட்டளை.